# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 48/ந/2026, நாள் 21.08.2026

பி. வாணி,
பெரிய கசிநாயக்கன்பட்டி, திருப்பத்தூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
திருப்பத்தூர் நகராட்சி, திருப்பத்தூர் மாவட்டம். – எதிர்மனுதாரர்

திருப்பத்தூர் மாவட்டம், பெரிய கசிநாயக்கன்பட்டி, கசிநாயக்கன்பட்டி, ரகுபதி நகர், கதவு எண்.111 என்கிற முகவரியில் வசிக்கும் திருமதி பி. வாணி என்பவரது நாளிடப்படாத புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.02.2026 அன்று பெறப்பட்டு 48/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருப்பத்தூர் மாவட்டம், பெரிய கசிநாயக்கன்பட்டி, கசிநாயக்கன்பட்டி, ரகுபதி நகர், கதவு எண்.111 என்கிற முகவரியில் வசிக்கும் பி. வாணி என்பவரின் நாளிடப்படாத புகார் மனுவுடன் இணைத்தனுப்பப்பட்டுள்ள மனுதாரரின் 02.02.2026 நாளிட்ட மனுவில் கீழ்காணும் புகார்கள் தெரிவித்துள்ளார்:

“எனது கணவர் திரு. வே. பிரபு (லேட்) அவர்கள் திருப்பத்தூர் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து கடந்த 16.11.2020 அன்று பணியிடை காலமானார். மேற்படி அவர்கள் பணியில் சேர்ந்த நாள் 02.02.2007 முதல் 16.11.2020 வரை அவருடைய ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பங்களிப்பு ஒய்வூதியம் தொகை (CPS) ஐந்து வருடங்களாகியும், இது நாள் வரை எனக்கு கிடைக்கப்பெறவில்லை. நான் பலமுறை திருப்பத்தூர் நகராட்சிக்கு நேரில் சென்றும், கேட்டும், பல கடிதங்கள் அனுப்பியும் எவ்வித பதிலும், மேற்படி (CPS) தொகையை பற்றி எவ்வித நடவடிக்கையும் எடுக்காமலும், மெத்தனமாகவும் உள்ளார்கள். மேலும், உடல் நலம் பாதிக்கப்பட்ட என்னை அலையவைத்தும், எனது கணவரின் ஊதியத்தில் பிடித்தம் செய்த தொகையை, எனக்கு வழங்காமல் மன உளைச்சல் ஏற்படுத்தி வருகின்றனர். மேலும் இது தொடர்பாக பல தபால்கள் அளித்த பின்பும், எனக்கு எவ்வித பதில் அறிக்கையும் எனக்கு வழங்கவில்லை.

எனவே, திருப்பத்தூர் நகராட்சியிலிருந்து வரவேண்டிய தொகையை உடனே வழங்க ஆவன செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.”.

2. மனுதாரரின் புகார் மனுமீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 23.02.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் திருப்பத்தூர் நகராட்சி ஆணையரை கேட்டுக்கொள்ளப்பட்டது.

3. எதிர்மனுதாரரான திருப்பத்தூர் நகராட்சி ஆணையரிடமிருந்து அறிக்கை ஏதும் பெறப்படவில்லை.

4. இந்நிலையில், குறிப்பிட்ட காலவரையறைக்குள் எதிர்மனுதாரரின் அறிக்கை பெறப்படாததால், மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான திருப்பத்தூர் நகராட்சி ஆணையர் ஆகியோரை 23.06.2026 அன்று நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 15.06.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் மற்றும் மனுதாரரின் மகன் திரு. பி. ராஜேஷ் ஆகியோர் 23.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தங்களது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளனர்.

“எனது கணவர் (லேட்) திரு. வே. பிரபு என்பவர் திருப்பத்தூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணியாற்றி வந்தார். பணியில் இருக்கும்பொழுதே கடந்த 16.11.2020 அன்று காலமாகிவிட்டார். எனது இரண்டாவது மகனும் வேலையின்றி இருந்து வருவதால், எங்கள் குடும்பத்திற்கு போதிய வருமானம் இன்றி மிகவும் கஷ்டப்படுகிறோம்.

எனது கணவர் திருப்பத்தூர் நகராட்சியில் பணியாற்றிய காலத்தில் பிடித்தம் செய்த CPS பங்களிப்பு ஓய்வூதியத்தொகை இன்று வரை எனக்கு கிடைக்கவில்லை. தோராயமாக ரூ.6,60,000/– உரிய வட்டி தொகையுடன் எனக்கு வழங்கப்பட வேண்டியுள்ளது. மேற்படி பங்களிப்பு ஓய்வூதியத் தொகையை எனக்கு பெற்றுத்தருவதற்கு ஆவன செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவத்தை வேண்டிக்கேட்டுக்கொள்கிறோம்.’’.

6. எதிர்மனுதாரரான திருப்பத்தூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.3320/2008/பி3, நாள் 20.06.2026–ல் 23.06.2026 அன்று நடைபெறவுள்ள விசாரணைக்கு உதவியாளர் மற்றும் கணக்கு அலுவலர் (பொ) திரு. சி. தமிழரசன் என்பவருக்கு அங்கீகாரம் அளித்து உரிய அறிவுரைகள் வழங்கி அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து உதவியாளர் மற்றும் கணக்கு அலுவலர் (பொ) திரு. சி. தமிழரசன் என்பவர் 23.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

‘‘கடந்த 2020ம் ஆண்டு கொரோனா காலகட்டத்திலிருந்து நகராட்சியின் நிதி நிலைமை மிகவும் மோசமான நிலையில் இருந்து வந்ததால், நகராட்சியில் இறந்த பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கும் ஓய்வூதியப்பலன்களை சரியாக வழங்க முடியவில்லை.

கொரானா தொற்று காலத்திலிருந்து அரசாங்கத்திடமிருந்து போதிய நிதி ஆதாரம் பெறப்படாததால், பணியாளர்களுக்கான CPS பங்களிப்புத் தொகை குறைவாக செலுத்தப்பட்டு வந்தது. தற்போது நிதி நிலமை சீரானதால் CPS பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், மனுதாரரின் கணவர் பணிபுரிந்த காலத்திற்கு செலுத்த வேண்டிய ஊதியம் பிடித்தம் ரூ.20,550/– செலுத்தப்பட்டுள்ளது. இன்னும் 10 நாட்களுக்குள் மனுதாரரின் கணக்கில் வரவு வைக்கப்படும் என்பதையும், அது தொடர்பான அறிக்கையையும் இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படும் என்பதை மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்கள் முன்னிலையில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.

மனுதாரர், தனக்கு CPS ரூ.6,60,000/– உரிய வட்டியுடன் பெற்றுதருவதற்கு ஆவன செய்ய தெரிவிக்கப்பட்டமைக்கு தாங்கள் விளக்கம் என்ன என்று மீண்டும் விசாரணை செய்யப்பட்டதில் 15 தினங்களுக்குள் நான் கணக்கு பார்த்து தெரிவிக்கின்றேன் என பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.” .

7. மேலும், எதிர்மனுதாரரின் மேற்படி கடிதம் ந.க.எண்.3320/2008/பி3, நாள் 20.06.2026–ல் கீழ்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"திருப்பத்தூர் நகராட்சியில் பணிபுரிந்து வரும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊதியத்தில் பிடித்தம் செய்த CPS தொகை மற்றும் அதற்கு சமமான நிர்வாக பங்கு தொகை ஆகியவை 2019 – 2020 நிதியாண்டு வரை மட்டுமே முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது. 2020–2021, 2021–2022, 2022–2023 மற்றும் 2023–2024 ஆகிய நான்கு ஆண்டுகளுக்கு தொகை ஏதும் செலுத்தப்படாமல், நாளது தேதியில் ரூ.307.82 லட்சங்கள் (126.46 லட்சங்கள் பணியாளர் பங்குத் தொகை + 181.36 லட்சங்கள் நிர்வாக பங்குத் தொகை) அரசு கணக்கில் செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ளது. 2024–2025 மற்றும் 2025–2026 ஆம் ஆண்டுகளுக்கு ஊதியம் பிடித்தம் மற்றும் நிர்வாக பங்கு தொகை முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

மனுதாரரின் கணவர் பணிபுரிந்த காலத்திற்கு செலுத்த வேண்டிய ஊதியம் பிடித்தம் ரூ.20,555 மற்றும் நிர்வாக பங்கு தொகை ரூ.20,555 ஆகியவை 22.06.2026 அன்று நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது. அன்னாரது CPS கணக்கினை முடிவுக்கு கொண்டு வந்து, அவரின் மனைவி வாரிசு திருமதி வாணி அவர்களுக்கு CPS தொகை வழங்க ஏதுவாக கருத்துரு தயார் செய்யப்பட்டு வருகிறது. மேலும் இது போன்ற இடைப்பட்ட காலத்தில் பணி ஓய்வு பெற்ற மற்றும் பணியாளர்களிடம் ஆணை 12 நபர்களுக்கு செலுத்த வேண்டிய CPS பணியாளர் பங்குத் தொகை ரூ.10,29,414/– மற்றும் நிர்வாக பங்குத் தொகை ரூ.10,29,414/– தற்போது முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது.

தற்போது ஒவ்வொரு மாதமும் CPS தொகை மற்றும் நிர்வாக பங்கு தொகை முறையாக செலுத்தப்பட்டு வருகிறது. கோவிட் காலத்தில் ஏற்பட்ட நிதி நெருக்கடி காரணமாக இடைப்பெற்ற காலத்தில் CPS தொகை செலுத்தப்படாமல் நிலுவையாக உள்ள நிலையில், தற்போது அதனை சரி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே இந்த விசாரணையில் நகராட்சி சார்பாக விளக்கத்தினை ஏற்று கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மேலும் திருமதி. வாணி க/பெ. பிரபு அவர்களது CPS கருத்துருவை Form அரசுக்கு சமர்பிக்க ஏதுவாக கால அவகாசம் வழங்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.".

8. 23.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜரான திருப்பத்தூர் நகராட்சி உதவியாளர் மற்றும் கணக்கு அலுவலரால் விசாரணைக்கு தேவையான விவரங்கள் சரியான முறையில் தெரிவிக்காததால், எதிர்மனுதாரரான திருப்பத்தூர் நகராட்சி ஆணையரை 10.07.2026 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தின் 23.06.2026 நாளிட்ட கடிதம் மூலம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

9. எதிர்மனுதாரரான திருப்பத்தூர் நகராட்சி ஆணையர், நகராட்சி உதவியாளர் மற்றும் கணக்கு அலுவலர் (பொ) ஆகியோர் 10.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

"தூய்மைப் பணியாளர், (லேட்) திரு.பிரபு திருப்பத்தூர் நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட ஓய்வூதிய பங்களிப்பு திட்ட பணியாளர் பங்குத் தொகை மற்றும் அதற்கு இணையான நிர்வாக பங்குத் தொகைகளை உரிய அரசு கணக்கில் 22.06.2026 அன்று செலுத்தப்பட்டுள்ளது.

மேலும், மேற்கண்ட பணியாளரின் ஓய்வூதிய திட்டத்தில் உள்ள நிர்வாக பங்குத் தொகை மற்றும் பணியாளர் பங்குத் தொகை ஆக மொத்தம் நிலுவைத் தொகையான ரூ.7,07,356/– (ரூபாய் ஏழு இலட்சத்து ஏழாயிரத்து முன்னூற்றி ஐம்பத்தாறு மட்டும்) அனுமதிக்க முன்மொழிவுகள் மூன்று

பிரதிகளில் ஆணையாளர், கருவூலம் / கணக்குகள், சென்னை அவர்களுக்கு அனுப்பி நடவடிக்கையில் உள்ளது என்பதை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

இன்னும் 15 நாட்களுக்குள் திருமதி. பி.வாணி அவர்களின் கணக்கில் வரவு வைத்திட உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை பணிவுடன் மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் முன்பு தெரிவித்துக்கொள்கிறோம்.''.

10. மேலும், 10.07.2026 அன்று நடைபெற்ற விசாரணையின் போது சமர்ப்பித்துள்ள திருப்பத்தூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.48/2026/பி2, நாள் 09.07.2026–ல் கீழ்காணும் விவரங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"
- திருப்பத்தூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்த திரு. வி. பிரபு என்பவர் 16.11.2020–ம் தேதி பணியிடையில் இறந்துவிட்டார்.
- அவர் பணிபுரிந்த காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட ஓய்வூதிய பங்களிப்பு திட்ட பணியாளர் பங்குத் தொகை மற்றும் அதற்கு இணையான நிர்வாக பங்குத் தொகைகளை உரிய அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.
- மேற்படி பிடித்தம் செய்யப்பட்ட தொகையினை உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, வேலூர் அவர்களால் தணிக்கை செய்யப்பட்டு அதற்கான தணிக்கை சான்று பெறப்பட்டுள்ளது.
- மேலும், மேற்கண்ட பணியாளரின் ஓய்வூதிய திட்டத்தில் உள்ள நிர்வாக பங்குத் தொகை மற்றும் பணியாளர் பங்குத் தொகை ஆக மொத்தம் நிலுவைத் தொகையான ரூ. 7,07,356/– அனுமதிக்க முன்மொழிவுகள் மூன்று பிரதிகளில் ஆணையாளர், கரூவூலம் / கணக்குகள், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிலையில், அன்னாரது வாரிசான திருமதி பி. வாணி அவர்களுக்கு சேர வேண்டிய மொத்த நிலுவைத் தொகையான ரூ.7,07,356/–ஐ உரிய அரசு கணக்கில் செலுத்தப்பட்டு, அதற்கான முன்மொழிவுகள் அனுப்பப்பட்ட நிலையில், இவ்விளக்கத்தினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம், சென்னை அவர்கள் ஏற்றுக் கொண்டு முடித்து வைக்குமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.''.

11. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான திருப்பத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கைகள், ஆணையர் மற்றும் உதவியாளர் மற்றும் கணக்கு அலுவலர் (பொ) ஆகியோரின் வாக்குமூலங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:–

திருப்பத்தூர் நகராட்சியில் தூய்மைப் பணியாளராக பணிபுரிந்து வந்த மனுதாரரின் கணவர் 16.11.2020 அன்று காலமாகியுள்ளார் என்பதும், 02.02.2007 முதல் 16.11.2020 வரையிலான காலங்களில் மனுதாரரின் கணவரின் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பங்களிப்பு ஓய்வூதியம் தோராயமாக ரூ.6,60,000/– நகராட்சியால் வழங்கப்பட வேண்டியுள்ளது என்பதும், இத்தொகை ஐந்து வருடங்களாகியும் வழங்காததால், இதனை உரிய வட்டி தொகையுடன் நகராட்சியிடமிருந்து பெற்றுதர மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியுள்ளார் என்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து அறியவருகிறது.

பணியாளர்களின் ஓய்வூதியப் பணப்பலன்கள் 2019–2020 வரை செலுத்தப்பட்டுள்ளது என்பதும், கொரோனா தொற்று காலத்திலிருந்து நிதி நிலைமை மோசமானதைத் தொடர்ந்து பணியாளர்களின் பங்குத்தொகை மற்றும் நிர்வாக பங்குத்தொகை 2020–2021 முதல் 2023–2024 வரை அரசு கணக்கில் செலுத்தாமல் நிலுவையாக உள்ளது என்பதும், 2024–2025 மற்றும் 2025–2026 ஆண்டுகளுக்கான மேற்படித் தொகை முழுமையாக செலுத்தப்பட்டுள்ளது என்பதும், தற்போது நிதி

நிலைமை சீராகியுள்ளதால் CPS பங்களிப்புத் தொகை செலுத்துவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதும் திருப்பத்தூர் நகராட்சி ஆணையரின் 20.06.2026 நாளிட்ட அறிக்கையிலிருந்து அறியவருகிறது.

மேலும், திருப்பத்தூர் நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்த மனுதாரரின் கணவர் திரு. வி. பிரபு என்பவருக்கான பணியாளர் பங்குத் தொகை அரசு கணக்குத் தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது என்பதும், ஓய்வூதிய திட்டத்தில் உள்ள பணியாளரின் பங்குத் தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகை ரூ. 7,07,356/– அனுமதிக்க உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கை, வேலூர் அவர்களால் தணிக்கை செய்யப்பட்டு, தணிக்கை சான்று பெறப்பட்டு, ஆணையாளர், கரூவூலம் / கணக்குகள், சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்பதும் திருப்பத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை நாள் 09.07.2026–லிருந்தும், ஆணையர் மற்றும் உதவியாளர் மற்றும் கணக்கு அலுவலர் (பொ) ஆகியோர் 10.07.2026 அன்று அளித்த வாக்குமூலத்திலிருந்தும் அறியவருகிறது.

இந்நேர்வில் ,

1. 2020–2021 முதல் 2023–2024 வரை பணியாளர்களின் பங்குத்தொகை மற்றும் நிர்வாக பங்குத் தொகை அரசு கணக்கில் செலுத்தாமல் நிலுவையாக உள்ளது என திருப்பத்தூர் நகராட்சி ஆணையரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது மிகுந்த வருத்தமளிப்பதாக உள்ளது. பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் பொது வருங்கால வைப்பு நிதி, பங்களிப்பு ஓய்வூதியப் பிடித்தம், LIC மற்றும் இதர பாலிசிக்களுக்கான பிடித்தங்கள் மற்றும் கூட்டுறவு சங்கக் கடன்களுக்கான தொகை ஆகியவை அடுத்து வருகின்ற மாதத்தின் 5 பணி நாட்களுக்குள் உரிய கணக்கில் செலுத்தப்பட்டு அறிக்கை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும், இதுநாள் வரை உரிய கணக்கிற்கு செலுத்தப்படாமல் உள்ள நிலுவைத் தொகைகள் ஒரு மாத காலத்திற்குள் உரிய கணக்கில் செலுத்தப்பட்டு 07.04.2022–க்குள் அறிக்கையை நகராட்சி நிர்வாக இயக்குநரகத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநரின் சுற்றறிக்கை ந.க.எண்20496/2021/எம்3, நாள் 02.03.2022–ல் வரிசை எண்.16ல் தெரிவிக்கப்பட்ட அறிவுரையை திருப்பத்தூர் நகராட்சி ஆணையர் கடைபிடிக்கவில்லை என்றே இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. எனவே, பணியாளர்களின் மாதாந்திர ஊதியத்தில் பிடித்தம் செய்யப்படும் தொகைகள் அந்தந்த கணக்கில் முறையாக செலுத்தப்பட்டு வருகிறதா என்பதையும், ஏற்கனவே செலுத்தப்படாமல் உள்ள நிலுவைத் தொகை விரைந்து செலுத்தப்பட்டு வருகிறதா என்பதை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் மூலம் காலமுறை அடிப்படையில் (Periodically) ஆய்வு செய்ய தக்க அறிவுரைகளை வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்தி ஆணையிடுகிறது.

2. மனுதாரரின் கோரிக்கைக்கேற்ப மனுதாரரின் கணவர் பணிபுரிந்த காலத்தில் சம்பளத்தில் பிடித்தம் செய்யப்பட்ட பணியாளர் ஓய்வூதிய பங்களிப்புத் தொகை மற்றும் நிர்வாக பங்களிப்புத் தொகை முழுவதுமாக அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளதாகவும், 15 நாட்களுக்குள் மேற்படித் தொகை மனுதாரருக்கு வழங்கப்படும் எனவும் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதால், உரிய அரசு நடைமுறைகளை பின்பற்றி, எவ்வித புகாருக்கும் இடம் கொடா வண்ணம் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய பணியிடையில் காலமுற்ற பணியாளரின் ஓய்வூதிய பணபலன்களை வட்டியுடன் விரைந்து வழங்கிடவும், அதுகுறித்த அறிக்கையினை ஒரு மாத காலத்திற்குள் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பி வைத்திட திருப்பத்தூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026ஆம் ஆண்டு, ஆகஸ்ட் திங்கள் 21–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திருமதி. பி. வாணி,
க/பெ. பிரபு (லேட்),
எண்.111, ரகுபதி நகர்,
கசிநாயக்கன்பட்டி,
பெரிய கசிநாயக்கன்பட்டி,
திருப்பத்தூர் – 635 901.

2. நகராட்சி ஆணையர்,
திருப்பத்தூர் நகராட்சி,
திருப்பத்தூர் மாவட்டம்.

3. நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்,
வேலூர் மண்டலம்,
வேலூர் மாவட்டம்.

4. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5. இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032

செயலாளர்.